பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**12 09 2026 SATURDAY 7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. உலக பொருளாதாரத்தை கட்டுக்குள் வைத்திருக்கும் நாடுகள் பொருளாதார நிர்வாகத்தை முறைப்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

2. தீவிரவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகளை ஒன்றிணைந்து மேற்கொள்ள பிரிக்ஸ் நாடுகள் உறுதியளித்துள்ளன.

3. மலேசியா உடனான பொருளாதார ஒத்துழைப்பு குறித்து அந்நாட்டு அமைச்சர் **Datuk Abdul Ghani-**யுடன், மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் பேச்சு நடத்தினார்.

4. உலகில், அந்நிய செலாவணி கையிருப்பு அதிகளவில் வைத்துள்ள நான்காவது பெரிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக ரிசர்வ் வங்கி கூறியுள்ளது.

5. இந்தியா ஏ - ஆஸ்திரேலியா ”ஏ” அணிகளுக்கு இடையேயான முதலாவது மகளிர் டிவென்டி - டிவென்டி கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகிறது.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<<<>>>>>>

உலக பொருளாதாரத்தை கட்டுக்குள் வைத்திருக்கும் நாடுகள் பொருளாதார நிர்வாகத்தை முறைப்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்றுவரும் பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் உரையாற்றிய அவர், ஐ நா பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தங்கள் கொண்டுவருவதற்கு இனியும் காலம் தாழ்த்தக்கூடாது என்று கூறினார்.

நாடுகளின் உண்மையான பொருளாதார நிலையின் அடிப்படையில் ஓட்டுரிமை, தலைமை பொறுப்பு, கொள்கை வகுப்பதில் முன்னுரிமை ஆகியவை அளிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

வளர்ந்துவரும் நாடுகளுக்கு பொருளாதார ரீதியாக சம வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்றும், எதிர்கால தொழில்நுட்பங்களை அந்த நாடுகள் தடையின்றி பயன்படுத்திக் கொள்ளும் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்று இந்தியா வலியுறுத்துவதாக பிரதமர் கூறினார்.

வளர்ந்துவரும் நாடுகளுக்கான ஆட்சி அதிகாரமும் அவர்கள் கையில் உறுதி செய்யப்பட வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரிக்ஸ் நாடுகள் கூட்டாக எடுக்கும் முடிவுகளுக்கு இணைந்து பணியாற்றுவதன் மூலம் அதன் பலன்களை முழுமையாக பெறலாம் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

இந்தியா தலைமையேற்று பிரிக்ஸ் உச்சிமாநாட்டை நடத்துவதற்கு ஒத்துழைப்பு நல்கிய தலைவர்களுக்கு தமது நன்றியையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்வதாக பிரதமர் கூறினார்.

உலக நாடுகளுக்கு இடையே அரசு நிர்வாகத்தை ஒருங்கிணைப்பது, பன்முகத் தன்மையை வலுப்படுத்துவது போன்ற நடவடிக்கைகளுக்கு பிரிக்ஸ் நாடுகள் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

பிரிக்ஸ் நாடுகள் அடுத்த 20 ஆண்டுகளுக்கான புதிய லட்சிய செயல்திட்டத்தை உருவாக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

கடல் பயணத்தின்போது மாலுமிகளுக்கான அவசரகால பாதுகாப்பு கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய பிரதமர், கடல்சார் அதிகாரிகள் மற்றும் தூதரகத்தை உடனடியாக தொடர்புகொள்வதற்கு வழிஏற்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

உலக வர்த்தகத்தில் மாலுமிகளின் பங்கு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரிக்ஸ் கூட்டமைப்பின் 20-ஆவது ஆண்டு நிறைவையொட்டி, இரண்டு அஞ்சல் தலைகள் உறுப்பு நாடுகளின் தலைவர்களால் இன்று வெளியிடப்பட்டது.

<<<<<<<>>>>>>

உலகின் பல பகுதிகளில் நிலவிவரும் போர் சூழலுக்கு பிரிக்ஸ் நாடுகள் கவலை தெரிவித்துள்ளன.

புதுதில்லியில் இன்று தொடங்கிய பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பிரதமர் திரு நரேந்திர மோடி முன்வைத்த பிரகடனத்தில் தற்போதைய சூழல் சர்வதேச அளவில் சட்டம் - ஒழுங்கு நிலைமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக நாடுகள் தற்போது ராணுவத்திற்காக அதிக அளவில் செலவழிப்பது கவலையளிப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீடித்த வளர்ச்சிக்காகவும், மனிதாபிமான அடிப்படையில் வறுமையை போக்கவும், பருவநிலை சவால்களுக்கு தீர்வுகாணவும் உலக நாடுகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியது அவசியம் என்றும் பிரகடனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேற்காசிய பகுதியில் நிலவும், போர் சூழல் பதற்றத்தை தணிக்க மிகுந்த கட்டுப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட நாடுகள் செயல்பட வேண்டும் என்றும் பிரிக்ஸ் நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

தற்போதுள்ள நிலைமையை மேலும் மோசமாக்கும் வகையில் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளக்கூடாது என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள் மீதோ அல்லது பொதுமக்களின் குடியிருப்புகள் மற்றும் அலுவலகங்கள் உள்ளிட்ட கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடைபெறுவது முற்றிலுமாக தவிர்க்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலமோ, தூதரக நடவடிக்கைகள் மூலமோ தீர்வுகாணப்பட வேண்டும் என்றும், அமைதி பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையை மேற்காசிய பகுதியில் உறுதி செய்ய வேண்டும் என்றும் பிரிக்ஸ் நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

இதேபோன்று, காஸா பகுதியில் அமைதி நிலைநாட்டப்பட வேண்டும் என்றும், இஸ்ரேல் - பாலஸ்தீனிய மோதலை முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

பாலஸ்தீனிய மக்களின் சட்டப்பூர்வ உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் பிரிக்ஸ் நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

ஐ நா பொதுச்சபை மற்றும் ஐ நா பாதுகாப்புச்சபை மூலமாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, பாலஸ்தீன மக்களின் மனிதாபிமான உரிமைகள் காக்கப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

தீவிரவாதத்தை எந்தவடிவிலும் நியாயப்படுத்த முடியாது என்று குறிப்பிட்டுள்ள பிரிக்ஸ் தீர்மானத்தில், ஜம்மு காஷ்மீரில் கடந்த ஆண்டு ஏப்ரல் 22-ஆம் தேதி நடத்தப்பட்ட தீவிரவாத தாக்குதலுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

தீவிரவாதம் மற்றும் அதன் அனைத்து கட்டமைப்புகளும் ஒடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

எல்லைதாண்டிய பயங்கரவாதம், தீவிரவாத அமைப்புகளுக்கான நிதியுதவியை தடுப்பது மற்றும் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் அமைப்புகளுக்கு எதிரான நடவடிக்கைகளை ஒன்றிணைந்து மேற்கொள்வது உள்ளிட்ட தீர்மானங்கள் பிரிக்ஸ் பிரகடனத்தில் இடம்பெற்றுள்ளன.

<<<<<<<>>>>>>

இந்தியா — மலேசியா இடையிலான இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து இன்று மலேசிய முதலீடு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் **Datuk Abdul Ghani**-யுடன், மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் இன்று பேச்சு நடத்தியுள்ளார்.

இதுதொடர்பாக திரு பியூஷ் கோயல் விடுத்துள்ள சமூக வலைதள பதிவில், வர்த்தகம், முதலீடு, சந்தை விரிவாக்கம், விநியோக சங்கிலியை வலுப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு முக்கிய விஷயங்கள் குறித்து மலேசிய அமைச்சருடன் விவாதித்ததாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா — ஆசியான் ஒத்துழைப்பு செயல் திட்டத்தின்படி மலேசியா உடனான உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் பேச்சு நடத்தியதாக திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>

இளம் பட்டயக் கணக்காளர்களில் அனுபவம், உறுதிப்பாடு மற்றும் பங்களிப்பு, நாட்டின் வளர்ச்சியை விரைவுபடுத்துவதாக அமைய வேண்டும் என்று, மத்திய இணையமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால் கூறியுள்ளார்.

புது தில்லியில், பட்டயக் கணக்காளர் கல்வி நிறுவன பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற பின் அவர் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவில் இதனைத் தெரிவித்துள்ளார்.

வலிமையான மற்றும் வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதிலும், பட்டயக் கணக்காளர்கள் முக்கியப் பங்காற்ற வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திர மோடியின் தலைமையின்கீழ், வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் நாடு புதிய மைல்கல்லை எட்டியிருப்பதாகவும் திரு. அர்ஜுன்ராம் மெஹ்வால் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>

உலகில், அந்நிய செலாவணி கையிருப்பு அதிகளவில் வைத்துள்ள நான்காவது பெரிய நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது.

ரிசர்வ் வங்கி மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக, கடந்த 4-ந் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், இந்தியாவின் அந்நியச் செலாவணி கையிருப்பு, 44 புள்ளி 9 பில்லியன் டாலர்கள் அதிகரித்து, 785 புள்ளி 7 பில்லியன் டாலராக உள்ளது.

இந்தப் பட்டியலில் சீனா முதலிடத்தில் உள்ளது. அதற்கடுத்தபடியாக ஜப்பான் இரண்டாம் இடத்திலும், சுவிட்சர்லாந்து மூன்றாம் இடத்திலும் உள்ளன.

<<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இளம் தலைவர்கள் வினாடி — வினா நிகழ்ச்சி மை பாரத் அமைப்பின் சார்பில் நடத்தப்பட்டு வருகிறது.

மை பாரத் அமைப்பின் தூத்துக்குடி மாவட்ட அதிகாரி திருமதி மதுமிதா, இப்போட்டிகள் குறித்த விவரங்களை எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — மதுமிதா — 47 Sec. )***

<<<<<<<>>>>>>

கஷ்மீரில் தீவிரவாத செயல்களுக்கு உதவியளித்த குற்றச்சாட்டின்பேரில், பாகிஸ்தானைச் சேர்ந்த லஷ்கரே தொய்பா தலைவர் ஹஃபீஸ் சையதிற்கு எதிராக, ஜாமீனில் வெளிவர முடியாத கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>

ஆஸ்திரேலியா ''ஏ'' அணிக்கு எதிரான முதலாவது மகளிர் டிவென்டி - டிவென்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா ''ஏ'' அணி

சற்றுமுன்வரை **17** புள்ளி மூன்று ஓவரில் **9** விக்கெட் இழப்பிற்கு **107** ரன் எடுத்துள்ளது.

சண்டிகரில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் டாஸ் வென்ற இந்தியா ஏ அணி முதலில் பேட் செய்ய தீர்மானித்தது.

**<<<<<<<END>>>>>>**